IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.89/2008
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.55p.m.

பி.வா.சா. 1 சாட்சி சிவமுருகன் த.பெ.வெள்ளையன் சிவணான்டி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 02.03.2026 in accordance with the provisions of Act XX141.**

4,5,7பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. 1வது பிரதிவாதி எனது தந்தை என்றால் சரிதான். 4,5,7 பிரதிவாதிகள் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டி மனு தாக்கல் செய்து வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். தாவா வழக்கு தாக்கல் செய்தது ஜெயக்கண்ணு என்பவர் எனது தந்தை வெள்ளையன் சிவணான்டி மீது தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான்.

2. வழக்குச் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதல்ல என்றால் சரிதான். வழக்குச் சொத்திற்கும் எனது தந்தைக்கும் எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. எனது தந்தையான 1வது பிரதிவாதிக்கு வழக்குச் சொத்து பாத்தியம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்குச் சொத்து நத்தம் சர்வே எண் 252/2A2 ல் கட்டுப்பட்டது என்றால் தெரியாது.

3. வழக்குச் சொத்தின் விஸ்தீரணம் 21 செண்டு என்றால் சரிதான். மேற்படி 21 செண்டுக்கு யார் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் யார் பெயரிலும் இல்லை. வழக்குச் சொத்து எனது தந்தையின் அனுபவத்தில் இருந்ததற்கு எனது தந்தை வரிஇரசீது எதுவும் செலுத்தி வந்தாரா என்றால் இல்லை. வழக்குச் சொத்து சம்மந்தமாக வாதிக்கும், எனது தந்தைக்கும் ஒத்திபத்திரம் ஏற்பட்டதா என்றால் இல்லை.

4. வழக்குச்சொத்து இவ்வழக்கின் 4,5,7 பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அவர்கள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. மேற்படி 4,5,7 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரை பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. வழக்குச் சொத்தின் 21 செண்டில் 4 செண்டு மட்டுமே வாதி அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல, எனது அனுபவத்தில்தான் உள்ளது.

5. வாதி அனுபவம் செய்து வந்த 4 செண்டுக்கு தெற்கே உள்ள சொத்தானது 4ம்பிரதிவாதியின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டு அவர்கள் அனுபவத்தில் இருந்து வந்தது என்றால் சரியல்ல. மேற்படி 4ம்பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ள சொத்திற்கு மேற்கே உள்ள சொத்தானது 5ம்பிரதிவாதி P.M. பாண்டி என்பவரின் முன்னோர்களின் அனுபவத்தில் இருந்து வந்த சொத்துக்கள் என்றால் சரியல்ல.

6. 4,5,பிரதிவாதிகளின் முன்னோர்கள் காலத்திலிருந்து பதிவுபத்திரங்கள் மற்றும் அடமான ஆவணங்கள் இருந்து வந்தது என்றால் சரியல்ல. 4ம்பிரதிவாதி வழக்குச் சொத்தின் அவர் அனுபவம் செய்து வரும் பகுதியில் மாட்டுக்கொட்டம் அமைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி மாட்டுக்கொட்டத்தின் அருகில் கழிவறை கட்டியுள்ளார் என்றால் சரிதான்.

7. 4ம்பிரதிவாதியின் அனுபவத்திற்கு வடக்கே வாதி இடமும், தெற்கே ஜெயக்கொடி, சந்தோஷம், பெரியகருப்பன் வீடுகளும், கிழக்கே 9 அடி அகல தென்வடல் சந்தும், மேற்கே 5ம்பிரதிவாதியின் இடமும் உள்ளது என்றால் சரியல்ல. 5ம்பிரதிவாதி அனுபவத்தில் உள்ள சொத்துக்களுக்கு கிழக்கே தவராஜன் இடம் உள்ளது என்றால் சரியல்ல. மேற்கே 7அடி பொதுச்சந்து உள்ளது என்றால் சரியல்ல. வடக்கே ஜெயக்கொடி, மற்றும் சிவபிரகாஷ் இடம் உள்ளதா என்றால் இல்லை. தெற்கே முத்துக்கருப்பன் மற்றும் சுந்தன் வீடு உள்ளதா என்றால் சுந்தன் வீடு மட்டும் உள்ளது.

8. வழக்குச் சொத்து 4,5,7 பிரதிவாதி வகையறாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், வாதி ஜெயக்கண்ணுக்கோ, 1ம்பிரதிவாதியான எனது தந்தைக்கோ எவ்வித பாத்தியமோ, உரிமையோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 4,5, 7 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அனுபவம் செய்வதற்காக எனது தந்தையும், ஜெயக்கண்ணுவும் கூட்டுச்சேர்ந்து வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

9. 4,5,7 பிரதிவாதிகளுக்கு வழக்குச் சொத்தில் பல வருடங்களுக்கு முன்பிருந்தே ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றாலும், அவர்களின் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. 4,5,7 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை 1ம்வாதியும், 1ம்பிரதிவாதியும் கூட்டுச்சேர்ந்து வழக்கு நடத்துவதை அறிந்து அவர்கள் அவசிய தரப்பினர் எனக்கருதி இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதியின் எதிர்வாதம் தவறானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:1.15p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.03 10:17:58 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.